www.Padasalai.Net www.TrbTnpsc.com

# Kanchipuram Dt

## இரண்டாம் திருப்புதல் தேர்வு – 2025

## பன்னிரெண்டாம் வகுப்பு

## வரலாறு

நேரம்: 3.00 மணி மதிப்பெண்கள்:90

பகுதி – அ

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 20x1=20

I சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. மாறுபட்ட ஒன்றைத் தேர்வு செய்க.
   அ) வில்லியம் ஜோன்ஸ் ஆ) சார்லஸ் வில்கின்ஸ் இ) மாக்ஸ்முல்லர் ஈ) அரவிந்தகோஷ்
2. பின்வரும் எது ஒன்று சரியாகப் பொருந்தியுள்ளது?
   அ) ஆங்கிலக் கல்விச் சட்டம் – 1843 ஆ) அடிமை முறை ஒழிப்பு – 1859
   இ) சென்னைவாசிகள் சங்கம் – 1852 ஈ) இண்டிகோ கலகம் – 1835
3. கல்கத்தாவில் அனுசீலன் சமிதியை நிறுவியவர்
   அ) புலின் பிஹாரி தாஸ்
   ஆ) ஹேமச்சந்திர கானுங்கோ
   இ) ஜதிந்திரநாத் பானர்ஜி மற்றும் பரிந்தர் குமார் கோஷ்
   ஈ) குதிராம் போஷ் மற்றும் பிரஃபுல்லா சாக்கி
4. இந்திய அரசாங்கம் ________ வகையான மேம்பாட்டிற்காக உறுதி பூண்டுள்ளது.
   அ) முதலாளித்துவ ஆ) சமதர்ம இ) தெய்வீக ஈ) தொழிற்சாலை
5. நில சீர்திருத்தச் சட்டம் தமிழ்நாட்டில் இரண்டாவது முறையாக எப்போது நடைமுறைப்படுத்தப்பட்டது?
   அ) 1961 ஆ) 1972 இ) 1976 ஈ) 1978
6. 1937–இல் நடைபெற்ற தேர்தலில் காங்கிரஸ் வெற்றி பெற்றது.
   அ) 12 மாகாணங்கள் ஆ) 7 மாகாணங்கள் இ) 5 மாகாணங்கள் ஈ) 8 மாகாணங்கள்
7. அரசமைப்பு நிர்ணய சபையின் முதல் கூட்டம் எப்போது நடைபெற்றது?
   அ) மார்ச் 22, 1949 ஆ) ஜனவரி 26, 1946 இ) டிசம்பர் 9, 1946 ஈ) டிசம்பர் 13, 1946
8. சுதந்திர இந்தியாவின் தற்காலிக அரசாங்கத்தை நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் எங்கு ஏற்படுத்தினார்?
   அ) இரங்கூன் ஆ) மலேயா இ) இம்பால் ஈ) சிங்கப்பூர்
9. தென்னாப்பிரிக்காவிலிருந்து திரும்பிய காந்தியடிகள் தன்து வெற்றிகரமான முதலாவது சத்தியாகிரகப் போராட்டத்தைத் தொடங்கிய இடம்
   அ) கேதா ஆ) தண்டி இ) சம்பரான் ஈ) பர்தோலி
10. இந்தியாவின் மூவர்ணக் கொடி எப்போது ஏற்றப்பட்டது?
    அ) டிசம்பர் 31, 1929 ஆ) மார்ச் 12, 1930 இ) ஜனவரி 26, 1930 ஈ) ஜனவரி 26, 1931
11. பனாரஸ் இந்துப் பல்கலைக்கழகம் யாரால் நிறுவப்பட்டது?
    அ) மகாத்மா காந்தியடிகள் ஆ) மதன்மோகன் மாளவியா இ) திலகர் ஈ) பி.பி. வாடியா

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



12. அகில இந்திய தொழிற்சங்க காங்கிரஸின் முதல் தலைவர் யார்?
அ) பி.பி. வாடியா ஆ) ஜவஹர்லால் நேரு இ) லாலா லஜபதிராய் ஈ) சி.ஆர். தாஸ்

13. பின்வருவோரில் கான்பூர் சதி வழக்கில் கைது செய்யப்பட்டவர் யார்?
அ) எம்.என். ராய் ஆ) பகத்சிங் இ) எஸ்.ஏ. டாங்கே ஈ) ராம் பிரசாத் பிஸ்மில்

14. கூற்று: காகிதம் கி.மு.(பொ.ஆ.மு) இரண்டாம் நூற்றாண்டில் சீனாவில் தோன்றியது.
காரணம் : நகரும் அமைப்பிலான அச்சு இயந்திரத்தை ஜெர்மனி கண்டுபிடித்தது.
அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.
ஆ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.
இ) கூற்று சரி, காரணம் தவறு
ஈ) கூற்று தவறு, காரணம் சரி

15. 1947–இன் இறுதியில் கிழக்கு ஐரோப்பாவில் சோவியத் ரஷ்யாவின் செல்வாக்கிலிருந்து விடுபட்டிருந்த ஒரே நாடு
அ) கிழக்கு ஜெர்மனி ஆ) செக்கோஸ்லோவாக்கியா இ) கிரீஸ் ஈ) துருக்கி

16. ஐ.நா. சபையின் முதல் பொதுச் செயலாளர் டிரிக்வே லை ________ சேர்ந்தவராவார்.
அ) பர்மா ஆ) ஜப்பான் இ) சிங்கப்பூர் ஈ) நார்வே

17. கீழே கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைப் பொருத்தி சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.
அ) மைக்கேல் பாரடே 1. ஆர்க்ரைட்
ஆ) எலியாஸ் ஹோவே 2. ராபர்ட் புல்டன்
இ) நீர்ச்சட்டகம் 3. மின்சாரம்
ஈ) நீராவிப் படகு 4. தையல் இயந்திரம்

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ) | 1 | 3 | 4 | 2 |
| ஆ) | 1 | 4 | 2 | 3 |
| இ) | 3 | 4 | 1 | 2 |
| ஈ) | 3 | 4 | 2 | 1 |

18. சாசனத்துவவாதிகளின் முக்கியத்துவம் பெற்ற செய்தித்தாள் ________ ஆகும்.
அ) ஏழை மனிதனின் பாதுகாவலன் ஆ) பட்டயம்
இ) வடக்கத்திய நட்சத்திரம் ஈ) இல் ரிசார்ஜிமென்டோ

19. ஜெர்மனி 1939 இல் ஆக்கிரமிப்பு தவிர்ப்பு ஒப்பந்தம் ஒன்றை ________ நாட்டோடு ஏற்படுத்திக் கொண்டது.
அ) ஆஸ்திரியா ஆ) இத்தாலி இ) ரஷ்யா ஈ) பிரிட்டன்

20. ஜெர்மனியின் முன்னேறி வந்து கொண்டிருந்த படைகளை பிரான்ஸ் வெற்றிகரமாக தடுத்து தோற்கடித்த போரின் பெயர் என்ன?
அ) மார்னே போர் ஆ) டானென்பர்க் போர் இ) வெர்டுன் போர் ஈ) சோம் போர்

www.Padasalai.Net

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## பகுதி – ஆ

**II ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும்.**
**வினா எண் 30க்கு கண்டிப்பாக விடையளி.** **7x2=14**

21. புதிய நிலவுடைமை உரிமைகளால் ஏற்பட்ட பாதிப்புகளை எழுதுக.
22. நவீன கல்வியில் சமயப் பரப்புக் குழுக்களின் பங்கினை விளக்குக.
23. பகிஷ்கிரித் ஹிதகர்னி சபா குறித்து எழுதுக.
24. சர் சையது அகமதுகான் பிரிட்ஷ் அரசினை ஏன் ஆதரித்தார்?
25. சிம்லா மாநாட்டின் பேச்சுவார்த்தைகள் ஏன் முறிந்தன?
26. தேசிய இயக்கத்தை ஒடுக்க காலனிய அரசு மேற்கொண்ட அடக்குமுறைகள் யாவை?
27. கிறித்துவ சீர்திருத்த இயக்கத்துக்கு எராஸ்மஸ் எவ்வாறு வழியமைத்தார்?
28. லாகூர் தீர்மானத்தின் முக்கியத்துவம் என்ன?
29. இத்தாலியை மெட்டர்னிக் "வெறும் பூகோள வெளிப்பாடே" என ஏன் கூறினார்?
30. கெல்லாக் – பிரையாண்ட் உடன்படிக்கையின் முக்கியத்துவத்தை எடுத்தியம்புக.

## பகுதி – இ

**III ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி.**
**வினா எண் 40க்கு கண்டிப்பாக விடையளி.** **7x3=21**

31. இந்திய அரசமைப்பின் தனித்தன்மைகள் யாவை?
32. இந்தியாவில் பசுமைப் புரட்சியின் விளைவுகள் யாவை?
33. சிட்டகாங் ஆயுதப்படைத் தாக்குதலை நடத்த சூரியாசென் எவ்வாறு திட்டமிட்டார்?
34. ஜாலியன் வாலாபாக் படுகொலை குறித்து குறிப்பு வரைக.
35. பெருவாரியான மக்களை ஒன்று திரட்ட சமிதிகளால் பயன்படுத்தப்பட்ட பணிகளின் சிறப்பம்சங்கள் யாவை?
36. கலெக்டர் ஆஷ் ஏன் வாஞ்சிநாதனால் கொல்லப்பட்டார்?
37. சூயஸ் கால்வாய் சிக்கல் குறித்து சுருக்கமாக வரைக.
38. அகழிப்போர் எவ்வாறு நடத்தப்பட்டது?
39. 1783–ல் கையெழுத்திடப்பட்ட பாரிஸ் உடன்படிக்கையின் முக்கிய சரத்துக்களை விவாதிக்கவும்.
40. மறுமலர்ச்சியின் தாயகமாக இத்தாலி விளங்கியது ஏன்?

## பகுதி – ஈ

**IV அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **7x5=35**

41. அ) இந்தியாவில் தேசிய விழிப்புணர்வுக்குப் பிரிட்டிஷாரின் அடக்குமுறை மற்றும் இனவெறிக் கொள்கைகள், எந்த அளவிற்குக் காரணமாக இருந்தன?

*(அல்லது)*

ஆ) வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் போக்கினை விவாதிக்கவும்.

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



42. அ) ஒத்துழையாமை இயக்கத்தை நடைமுறைப்படுத்தும் சூழலையும் அதன் விளைவுகளையும் விவரி.

(அல்லது)

ஆ) சுதந்திரப் போராட்டத்தை இந்திய தேசிய இராணுவ விசாரணை எவ்வாறு தீவிரப்படுத்தியது ?

43. அ) அணிசேரா இயக்கத்தின் இலக்குகளையும், நோக்கங்களையும் கோடிட்டுக் காட்டவும்.

(அல்லது)

ஆ) முதல் இரண்டு ஐந்தாண்டு திட்டங்களின் சாதனைகளை மதிப்பிடுக.

44. அ) தொழிற்புரட்சி ஏன் முதலில் இங்கிலாந்தில் தொடங்கிற்று? நவீன சமூகத்தின் மீது அது என்ன தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது?

(அல்லது)

ஆ) 1919 – 1939 ஆம் ஆண்டுகளுக்கிடையில் காலனி ஆதிக்க இந்தியாவில் ஏற்பட்ட தொழில் வளர்ச்சியினைப் பற்றி எழுதுக.

45. அ) "பாதுகாப்பு கவுன்சிலின் நிரந்தர உறுப்பினர்கள் தொடர்பு கொண்டுள்ள பிரச்சனைகளில் ஐ.நா. சபை மௌனமான பார்வையாளராகவே இருந்தது" பனிப்போர் காலத்து அனுபவங்களின் வாயிலாக இக்கூற்றை விளக்கமாக எடுத்துரைக்கவும்.

(அல்லது)

ஆ) இத்தாலிய இணைவு எவ்வாறு சாத்தியமாக்கப்பட்டது ?

46. அ) வெர்செய்ல்ஸ் ஒப்பந்தம் ஜெர்மனியைப் பொறுத்தமட்டில் கடுமையானதாகவும் அவமானப்படுத்தக் கூடியதாகவும் தெரிந்தது – இக்கூற்றினை ஆதாரப் பின்புலத்துடன் உறுதிபடுத்துக.

(அல்லது)

ஆ) *இந்திய தேசிய இயக்கம் நடைபெற்ற கீழ்க்கண்ட இடங்களை இந்திய வரைபடத்தில் குறிக்கவும்.*

1) கல்கத்தா 2) தூத்துக்குடி 3) வேதாரண்யம் 4) டெல்லி 5) அமிர்தசரஸ்

47. அ) இரண்டாம் உலகப்போரின் விதைகளை வெர்செய்ல்ஸ் ஒப்பந்தமே தூவியது என்பதனை தகுந்த காரணத்தோடு விளக்குக.

(அல்லது)

ஆ) 1880 முதல் 1930 வரையிலான இந்திய தேசிய இயக்கத்தின் ஏதேனும் ஐந்து நிகழ்வுகளை காலக்கோடு வரைந்து காட்டுக.

***/***

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com